SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் பங்குனி 14 | ஹிஜ்ரி 1446 ரமலான் 27

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, மார்ச் 28, 2025 ● வெளியூர்: 29-3-2025, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 252 ● 8 பக்கம் ● ரூ.6

## சிஐஐ தென்னிந்திய மநாட்டை தொடங்கி வைத்தார்

# இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு




**சென்னை, மார்ச் 28-**

சென்னை கிண்டி ஐடிசியில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்ற சிஐஐ தென் இந்திய மாநாட்டை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மாநாட்டில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு தமிழகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகித்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்துவமானது; தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி.

கோவை, திருச்சி, ஒசூர் போன்ற மாவட்டங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன; கடந்த 11 மாதங்களில் 12.6 பில்லியன் டாலர் அளவிற்கு மின்சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளது இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு 12.11 சதவீதம் பங்களிப்பு செய்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு 8 சதவீதத்துக்கும் மேல் பொருளாதார வளர்ச்சி அடைந்து, இந்தியாவின் 2வது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடாமல், வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

தமிழ்நாடு சிஐஐ இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவேன். சென்னையை உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்ற 3வது திட்டம் தயாராகி வருகிறது. பசுமைப் பொருளாதார துறையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நீர்வளங்களை திறம்பட நிர்வகித்தல், நீர் சேகரிப்பு உள்ளிட்டவற்றை செயல்படுத்தி வருகிறோம். தொழில்துறைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாட்டில் 100 நாள் வேலை திட்ட ஊதியம் உயர்வு

**சென்னை, மார்ச் 28-**

கிராமப்புற வறுமையை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை மத்திய அரசு கடந்த 2005ம் ஆண்டு இயற்றியது. இந்த சட்டத்தின் கீழ், 100 நாள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஊரக வேலை உறுதித்திட்ட அட்டை வைத்திருப்பவர்கள் வேலை கோரினால் அந்த நபர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாள் வேலை அளிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்த திட்டம் அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 25.25 கோடி பேர் பதிவு செய்துள்ளனர். இதில், 14.35 கோடி பேர் செயலில் உள்ள தொழிலாளர் களாகஉள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் 100 நாள் வேலை திட்ட ஊதியத்தை உயர்த்தி மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி 17 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. ரூ. 319 ஆக இருந்த 100 நாள் வேலை திட்ட ஊதியம் தற்போது ரூ.336 ஆக அதிகரித்து வழங்கப்படும் என்றும், வருகிற 1ம் தேதி (ஏப்ரல்) முதல் இந்த ஊதிய உயர்வு நடைமுறைக்கு வரும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக அரியானாவில் ரூ.26 உயர்த்தப்பட்டு ரூ.400ஆக 100 நாள் திட்ட ஊதியம் நிர்ணயம் செய்யப்பட் டுள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கியது



கடலூர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எல்லப்பன் உள்ளார்.

**சென்னை, மார்ச் 28-**

பிளஸ்2 மாணவமாணவிகளுக்கான பொதுத் தேர்வு கடந்த 3ந்தேதி தொடங்கி நேற்று முன்தினம் நிறைவு பெற்றது. இதேபோல், பிளஸ்1 வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த 5ந்தேதி தொடங்கிய நிலையில், அவர்களுக்கு நேற்றுடன் முடிவடைந்தது. இதனை தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் 10ம் வகுப்பு வகுப்பு மாணவமாணவிகளுக்கான பொதுத்தேர்வு இன்று தொடங்கியது. இன்று தொடங்கும் தேர்வு அடுத்த மாதம் (ஏப்ரல்) 15ந்தேதி வரை நடைபெற இருக்கிறது.

இந்த தேர்வை 4 லட்சத்து 46 ஆயிரத்து 411 பள்ளி மாணவர்கள், 4 லட்சத்து 40 ஆயிரத்து 465 பள்ளி மாணவிகள், 25 ஆயிரத்து 888 தனித்தேர்வர்கள், 272 சிறைவாசிகள் என மொத்தம் 9 லட்சத்து 13 ஆயிரத்து 36 பேர் எழுதுகிறார்கள். இதற்காக மாநிலம் முழுவதும் 4 ஆயிரத்து 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. தேர்வு அறை கண்காணிப்பாளர் பணியில் 48 ஆயிரத்து 426 பேரும், தேர்வு கண்காணிக்கும் பணியில் 4 ஆயிரத்து 858 பேரும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

முதல் நாளான இன்று தமிழ் மற்றும் இதர மொழிப் பாடங்களுக்கான தேர்வு நடக்கிறது. காலை 10 மணிக்கு தொடங்கும் இந்த தேர்வு பிற்பகல் 1.15 மணி வரை நடைபெற உள்ளது. தேர்வின் முதல் 10 நிமிடம் வினாத்தாளை வாசிப்பதற்கும், அடுத்த 5 நிமிடம் சுய விவரங்களை விடைத்தாளில் பதிவு செய்வதற்கும், 10.15 மணி முதல் 1.15 மணி வரை தேர்வு எழுதுவதற்கும் ஒதுக்கப்பட் டுள்ளது.

## விளையாட்டு நகரம் அமைக்க செம்மஞ்சேரியில் 100 ஏக்கர் நிலம் தயார்: தமிழக அரசு தகவல்

**சென்னை, மார்ச் 28-**

தமிழக சட்டசபையில், திட்டம், வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு நேற்று முன்வைக்கப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு:

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 4 அடுக்கு கட்டிடமாக உயர் செயல்திறன் பயிற்சி மையம், 250 படுக்கை வசதி, தங்கும் விடுதி, உடற்பயிற்சி கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும். நகர்ப்புறங்களில் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காக அரசு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆண்டு 12,838 நகர்ப்புற வார்டுகளில் 19,429 தொகுப்புகள் வினியோகம் செய்யப்படும்.

கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 2 லட்சத்து 62 ஆயிரத்து 688 மாணவர்கள், 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக கல்வி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த ஆண்டுக்கான கலைஞர் உரிமைத் தொகை திட்டத்துக்காக ரூ.13,807 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இலங்கை தமிழர் குடும்பங்களையும் சார்ந்த 14,246 பெண்கள் உள்பட 1.15 கோடி பெண்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

விளையாட்டு நகரத்தை அமைக்க சென்னை செம்மஞ்சேரியில் 100 ஏக்கர் பரப்பளவு நிலம் அடையாளம் காணப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு மாற்றப்பட்டு உள்ளது. இது, முக்கிய சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள், மாநிலத்தில் நடைபெற வழிவகுக்கும். பிரபலமான பாரம்பரிய விளையாட்டுகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதுடன், இளைஞர்களை விளையாட்டுகளை நோக்கி ஈர்க்க வழிவகுக்கும். இதற்கான விரிவான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை முடிவடையும் தருவாயில் உள்ளது.

கோவை சிங்காநல்லூரில் 28.36 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். பெண்களுக்கு உரிய தரமான வேலைவாய்ப்பு திட்டம் ஒன்று ரூ.50 லட்சம் செலவில் ஒப்பந்த அடிப்படையிலான நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 9ம் வகுப்பு மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் பேசிய ஆசிரியர் பணியிடை நீக்கம்

**கள்ளக்குறிச்சி, மார்ச் 28-**

கள்ளக்குறிச்சி நான்கு முனை சந்திப்பு அருகே அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் கள்ளக்குறிச்சி மட்டுமின்றி கச்சிராயப்பாளையம், சின்னசேலம், சங்கராபுரம், தியாகதுருகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த ஏராளமான மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இப்பள்ளியில் சமூக அறிவியல் ஆசிரியராக பணியாற்றி வந்த அன்பழகன் (வயது 59) என்பவர் 9ம் வகுப்பு படிக்கும் மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் பேசியதாக தெரிகிறது. இது குறித்து மாணவிகள் பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர். மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர், முதன்மை கல்வி அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் மாணவிகள் புகார் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து ஆசிரியர் அன்பழகனை துறை ரீதியாக பணியிடை நீக்கம் செய்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா உத்தரவிட்டுள்ளார். பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் அன்பழகன் இன்னும் 3 மாதத்தில் ஓய்வு பெற உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, மார்ச் 28-**

பங்குச்சந்தை வீழ்ச்சி மற்றும் போர் சூழல்களால், தங்கத்தை பலரும் பாதுகாப்பான முதலீடாக கருதி அதில் முதலீடு செய்து வருகிறார்கள். இதனால் தேவை அதிகரித்து தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் புதிய உச்சத்தை தொட்டு வருகிறது. கடந்த 20ந்தேதி தங்கம் விலை இதுவரை இல்லாத உச்சமாக ரூ.66,480 என்ற நிலையை அடைந்தது. அன்றைய தினம் ஒரே நாளில் மட்டும் சவரனுக்கு ரூ.1,440 அதிகரித்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 21ந்தேதியில் இருந்து குறைந்து வந்த தங்கம் விலை, நேற்று முன்தினம் அதிகரித்தது. நேற்றும் விலை உயர்ந்து ஒரு சவரன் ரூ.65,880க்கு விற்பனை செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இன்றும் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.840 உயர்ந்து ஒரு சவரன் ரூ.66,720க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.105 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,340க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் ரூ.114க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 14 ஆயிரத்துக்கும் விற்பனையாகி வருகிறது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• வெள்ளி • மார்ச் 28, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# 6553 கி.மீ தூரம் சைக்கிளில் பயணம் மேற்கொள்ளும் மத்திய தொழில் துறை பாதுகாப்பு படையினர் காரைக்கால் வருகை




**காரைக்கால், மார்ச் 28-**

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் இருந்து கன்னியாகுமரிக்கு 9 மாநிலங்கள் வழியாக 6553 கி.மீ தூரம் சைக்கிளில் பயணம் மேற்கொண்டு வரும் மத்திய தொழில் துறை பாதுகாப்பு படையினரின் நேற்று காரைக்கால் வந்து இன்று மீண்டும் பயணத்தை தொடங்கினர்

மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையின் 56வது உதய தினத்தை முன்னிட்டு, 14 பெண் வீரர்கள் உள்பட 125 படை வீரர்கள் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரை சாலை மார்க்கமாக .மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் இருந்து கன்னியாகுமரிக்கு 9 மாநிலங்கள் வழியாக 6553 கி.மீ தூரம் சைக்கிளில் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதையடுத்து அவர்கள் கட்டாக், ஒடிசா, விசாகப்பட்டினம், விஜயவாடா, நெல்லூர், சென்னை வழியாக புதுச்சேரிக்கு வந்து நேற்று மாலை காரைக்கால் மாவட்டத்திற்கு வந்தடைந்தனர். மேலும் வந்தடைந்த சி.ஐ.எஸ்.எப் படை வீரர்களுக்கு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் சி.ஐ.எஸ்.எப் சார்பில் அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் கல்லூரியில் சி.ஐ.எஸ்.எப் படை வீரர்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இன்று 28.03.2025 காலை 7:00 மணி அளவில் மத்திய தொழில்துறை பாதுகாப்பு படையினரின் கன்னியாகுமரி வரையிலான பயணத்தை சி.ஐ.எஸ்.எப் டி.ஐ.ஜி. சிவகுமார்

காரைக்கால் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் லட்சுமி சௌஜன்யா ஆகியோர்கள் கொடியசைத்து மிதிவண்டி பேரணியை தொடங்கி வைத்தனர். மேலும் பேரணியில் கலந்து கொண்டவர்களை மலர் தூவி வாழ்த்துக் கூறி வழி அனுப்பி வைத்தனர். இதில் காரைக்கால் சைக்கிள் கிளப் உறுப்பினர்கள் மற்றும் காரைக்கால் மாவட்ட தடகள சங்கத்தின் சிறுவர் சிறுமியர்கள் பலர் சி.ஐ.எஸ்.எப் வீரர்களுடன் மிதிவண்டி பேரணியில் கலந்து கொண்டனர். மேலும், இன்று காரைக்கால் மாவட்டத்திலிருந்து சிஐஎஸ்எப் வீரர்களின் இந்திய கடலோர சுற்றுச் சூழல் மற்றும் மத்திய கடலோர பாதுகாப்பை மேம்படுத்தும் இந்த விழிப்புணர்வு மிதிவண்டி பேரணையானது கன்னியாகுமரி நோக்கி புறப்பட்டது. மேலும் அவர்கள் வரும் 31ம் தேதி கன்னியாகுமரிக்கு சென்றடையுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் சி.ஐ.எஸ்.எப் சீனியர் கமாண்டன்ட் நவோதிப் சிங் ஹீரா, சப் கலெக்டர் அர்ஜுன் ராமகிருஷ்ணன், காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன், அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### வேலவன் பஸ் உரிமையாளர் தந்தையின் நினைவு தினத்தை முன்னிட்டு

# பேருந்தில் பொதுமக்களுக்கு இலவச பயணம்




**கோவை, மார்ச் 28-**

கோவை சரவணம்பட்டி பகுதியில் வசித்து வரும் ராஜ்குமார் என்பவர் வேலவன் பஸ் சர்வீஸ் நிறுவனம் வழித்தடம் எண் 22 என்ற நகர பேருந்தை இயக்கி வருகிறார். இவர் தனது தந்தையின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழகத்தில் முதல்முறையாக காலை முதல் இரவு வரை ஒரு நாள் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் முதியவர்கள் என அனைவருக்கும் இன்று ஒருநாள் இலவசமாக பயணித்தனர்.

இது குறித்து நிறுவனர் ராஜ்குமார் கூறுகையில், எனது தந்தை சுப்பிரமணியம் சரவணம்பட்டி பகுதியிலிருந்து காந்திபுரத்திற்கு பேருந்தில் பணிக்கு சென்று வருவார். அப்போது ஏழ்மையின் காரணமாக சில சமயங்களில் 30பைசா பயணச்சீட்டைக் கூட வாங்க முடியாமல் நடந்தே வருவார். அப்போது அவர் சொந்தமாக ஒரு பேருந்து வாங்க வேண்டும் எண்ணி அதற்க்கான முயற்சியில் இறங்கினார். ஆனால் சமீபத்தில் அவர் காலமானார். இதனால் அவரது கனவை நனவாக்க வேண்டுமென்று தீவிர முயற்சியில் ஈடுபட்டு கடந்த வருடம் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தில் வழித்தடம் எண் 22 என்ற நகர பேருந்தை வாங்கினேன். எனவே எனது தந்தையின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தில் அவரை நினைவு கூர்ந்து பொது மக்கள் மற்றும் பயணிகள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி இன்று ஒரு நாள் முழுவதும் பொது மக்களுக்கு இலவச சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பயணிகளுக்கு பயணச்சீட்டு இல்லாமல் இலவசமாக அழைத்து சென்று வருகிறோம் என்று தெரிவித்தார். எனது வளர்ச்சிக்கு உறுதுணையாக நிறுவனத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு இந்த தருணத்தில் வாழ்த்துக்களையும் நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இந்நிகழ்ச்சியில் அலுவலக பணியாளர்கள் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பொதுமக்கள் பயணிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாம்பழப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆண்டு விழா

**விழுப்புரம், மார்ச் 28-**




விழுப்புரம் மாவட்டம், காணை ஒன்றியம், மாம்பழப்பட்டு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி இறுதி ஆண்டு 23ம் வருட ஆண்டு விழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் சந்திரா தலைமை தாங்கினார் அதனைத் தொடர்ந்து பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, பாட்டு போட்டி, கட்டுரைப் போட்டி உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டும், பரிசுப் பொருட்களும் வழங்கி ஊக்கம் அளிக்கப்பட்டது. பள்ளி இறுதி ஆண்டு விழாவும் அதன் தொடர்ச்சியாக நடைபெற்றது. விழாவில் இருபால் ஆசிரிய பெருமக்கள் மற்றும் கிராம பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்இறுதி நிகழ்வாக ஆசிரியர் கோ.இராஜபரிமளன் நன்றியுரையாற்றி விழாவினை நிறைவு செய்தனர்.

# அரசு மேல்நிலைப்பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டம் குறுக்குச்சாலை அரசு மேல்நிலைப்பள்ளியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களிடையே "போதைப் பொருள் இல்லா தமிழ்நாடு" என்ற நிலையை உருவாக்கிட போதைப்பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக போதைப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் நடமாட்டம் குறித்து தங்களுடைய சுயவிவரங்கள் இன்றி புகார் செய்வதற்கு "DRUG FREE TN" என்ற கைபேசி செயலி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் "போதைப் பொருள் இல்லா தமிழகம்" என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பரப் பதாகைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், ஆகியோர் முன்னிலையில் பள்ளி மாணவ, மாணவியர்கள் கையில் உயர்த்திப் பிடித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# கடலூரில் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் முதலமைச்சர் சாதனைகள் குறித்து புகைப்பட கண்காட்சி




தமிழ்நாடு முதலமைச்சர் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து கடலூர் மஞ்சகுப்பத்தில் நடைபெறும் மூன்றாவது புத்தகத் திருவிழாவில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக அமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

# தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை, மார்ச் 28-**

தமிழக சட்டசபையின் இன்றைய அலுவல்கள் தொடங்கி நடைபெற்று வருகிறது. கேள்வி நேரமும், துறை ரீதியான மானியக் கோரிக்கை விவாதமும் நடந்து வருகிறது. அப்போது மதுரை உசிலம்பட்டி காவலர் கொலை தொடர்பாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.கவன ஈர்ப்பு தீர்மானம் முறையாக கொடுத்தால் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவை முன்னவர் துரைமுருகன் தெரிவித்தார். இதையடுத்து பேரவையில் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பு இன்று விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.கவன ஈர்ப்பு விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்,

சபாநாயகரை கை நீட்டி பேசுவது மரபல்ல.. நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். தயாராக உள்ளேன். டிவியை பார்த்துதான் தெரிந்துகொண்டேன் எனக் கூற மாட்டேன். ஆனால், மரபை பின்பற்றுங்கள். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம். தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றங்களுக்கு எதிராக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்த மாநில விரோத சக்திகள், தமிழர் விரோத சக்திகள் முயற்சிக்கின்றன; தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது . என தெரிவித்தார் .

# தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டி




தி ரைசிங் சன் ஆங்கில இதழ் ஆசிரியர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியை துவக்கி வைத்து உரையாற்றினார்கள். உடன் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எ.வி.கல்பனா, பேச்சுப்போட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு.ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர்.

# 16வது முறையாக புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி
# சட்டப்பேரவையில் தீர்மானம்



புதுச்சேரி, மார்ச் 28-

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டசபையில் 16வது முறையாக நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுச்சேரி சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த 10ம் தேதி கவர்னர் உரையுடன் துவங்கியது. 12ம் தேதி நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் ரங்கசாமி 13,600 கோடிக்கு பட்ஜெட் தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து கவர்னருக்கு நன்றியும், பட்ஜெட் மீதான விவாதமும் நடந்து வந்தது.

இந்நிலையில் நிறைவு நாளான நேற்று புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில் திமுக எம்.எல்.ஏ.,க்கள் நாஜிம், அனிபால் கென்னடி, செந்தில்குமார், காங்கிரஸ் சட்டமன்ற கட்சி தலைவர் வைத்தியநாதன், சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு ஆகியோர் தனிநபர் தீர்மானங்கள் கொண்டு வந்து, முன்மொழிந்து பேசினர்.

அந்த தீர்மானத்தில், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கேட்டு, சட்ட சபையில் 15 முறை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பியும் இதுவரை அதிகார விடுதலை கிடைக்கவில்லை. புதுச்சேரி மாநிலம் முன் எப்போதும் இல்லாத அளவில் தற்போது நிதிச் சுமை மற்றும் நிர்வாக அதிகாரம் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பிற மாநிலங்களை போல் துரித நடவடிக்கை எடுக்க முடியாததால் அரசு அறிவிக்கும் திட்டங்களை உடனுக்குடன் நிறைவேற்ற முடியவில்லை.

புதுச்சேரிக்கு கடந்த 2007ம் ஆண்டு தனிக் கணக்கு தொடங்கப்பட்டது முதல் மத்திய அரசு பங்களிப்பு குறைந்து வருகிறது. 2017ல் ஜி.எஸ்.டி., வரி அமல்படுத்தப்பட்ட பின் சொந்த வருவாயில் மாநிலம் நிற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் மாநிலத்திற்கு உடனடியாக நிர்வாக விடுதலை வேண்டும். புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என மத்திய அரசை இந்த சட்டசபை வலியுறுத்துகிறது என தீர்மானத்தை கொண்டு வந்தனர்.

அப்போது, 'புதுச்சேரிக்கு தனி தேர்வாணையம், நிதி கமிஷனில் சேர்ப்பது எல்லாம் மாநில அந்தஸ்து வந்தால் கிடைத்துவிடும்' என, கூறிய சபாநாயகர் செல்வம், இந்த தீர்மானத்தின் மீது எம்.எல்.ஏ., க்கள் பேசலாம் என அழைப்பு விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து தீர்மானத்தை ஆதரித்து எம்.எல்.ஏ.,க்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்து மாநில அந்தஸ்து பெற அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதனை அடுத்து முதலமைச்சர் ரங்கசாமி பேசும் போது, மாநில அந்தஸ்து பெறுவதுதான் அரசின் எண்ணம். அதுதான் மக்களின் எண்ணமும் ஆகும். மாநில அந்தஸ்தை தொடர்ந்து கேட்டு வருகிறோம். கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இதை பெற அரசு தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்துவோம் என்று பேசினார்.

அதனை அடுத்து, எம்.எல்.ஏ.,க்கள் கொண்டு வந்த தனிநபர் தீர்மானங்களை திரும்ப பெற்றனர். இதையடுத்து மாநில அந்தஸ்து கோரும் தீர்மானம் சட்டசபையில் ஏகமனதாக அரசு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேசிய சபாநாயகர் செல்வம், புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று மத்திய அரசை இந்த சட்டசபை வலியுறுத்துகிறது. இந்த தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார். இதன் பின்னர் காலை 12.21 மணிக்கு சட்டசபை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி 15 முறை சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையில், நேற்று 16வது முறையாக மாநில அந்தஸ்து கேட்டு தீர்மானம் நிறைவேற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 18 வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்த முதலமைச்சருக்கு பாராட்டு
# பேரவையில் 781 கேள்விகளுக்கு பதில்
## சபாநாயகர் செல்வம் தகவல்



புதுச்சேரி, மார்ச் 28-

புதுச்சேரி சட்டசபையில் 18 வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்து சாதனை படைத்த முதலமைச்சருக்கு பாராட்டும், சட்டசபை கூட்டத்தொடரில் 781 கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்ட தாகவும் சபாநாயகர் செல்வம் தெரிவித்தார்.

புதுவை சட்டசபையில் சபாநாயகர் செல்வம் பேசியதாவது, புதுச்சேரி சட்டப்பேரவை கடந்த 10ம் தேதி கவர்னர் கைலாஷ்நாதன் உரையுடன் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் 13 அமர்வு நாட்களை கொண்டிருந்தது. முதலமைச்சர் 12ந்தேதி பட்ஜெட் தாக்கல் செய்தார். முதலமைச்சர் ரங்கசாமி 18வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளார். அவருக்கு என் சார்பாகவும், சட்டப் பேரவையின் சார்பாகவும் பாராட்டுக்கள்.

இந்த கூட்டத்தொடரில் 579 உடுக்குறியிட்ட வினாக்கள், 263 உடுக்குறியிடா வினாக்கள் என மொத்தம் 842 வினாக்கள் பெறப்பட்டது. இதில் 541 உடுக் குறியிட்ட வினாக்கள், 240 உடுக்குறியிடா வினாக்களுக்கு என மொத்தம் 781 வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டது.

ஒரு நிதி மசோதா ஆய்வுக்கு எடுக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது.9 நாட்கள் கேள்வி நேரத்துக்கு ஒதுக்கப்பட்டது. 2 நாட்கள் காலை, மாலை என சபை நடத்தப்பட்டது. அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களும் சபையின் கவனத்துக்கு வர வேண்டும் என்பதற்காக பூஜ்யநேரத்திலும் பலருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சட்டசபை குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்க ப்பட்டனர். நில அளவை துறையின் 3 அறிக்கை, ஆணைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. அதிக வினாக்களுக்கு அமைச்சர்கள் பதில் அளித்துள்ளனர். இதற்காக முதலமைச்சர், அமைச்சர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்.இதற்கு உறுதுணையாக செயல்பட்ட அனைத்து அரசு துறை செயலர்கள், ஊழியர்கள், அதிகாரிகளுக்கு நன்றி.

புதுவைக்கு மாநில அந்தஸ்து வேண்டும் என்ற உறுப்பினர்களின் தனி நபர் தீர்மானம் அரசு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபை நிகழ்வுகளை காரைக்காலை சேர்ந்த பள்ளி மாணவர்கள் நேரில் கண்டனர். இதற்காக கல்வித்துறைக்கு பாராட்டுக்கள்.

கவர்னர் உரை, பட்ஜெட் தாக்கல் நேரடியாக சமூக வலைதளத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வரவேற்பு பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை செய்த செய்தி விளம்பரத்துறைக்கு நன்றி.சட்டசபையில் மனமுவந்து தமிழில் உரையாற்றிய கவர்னருக்கு சட்டசபையின் சார்பாக நன்றி. சபை நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புடன் நடைபெற ஒத்துழைத்த உறுப்பினர் களுக்கு நன்றி. வரும் காலத்தில் இதைவிடவும் சிறப்பாக மக்களுக்கு பணியாற்ற ஆர்வத்துடன் செயல்பட வாழ்த்துக்கள். சட்டசபை பாதுகாப்பு பணி புரிந்த காவல்துறை, போக்குவரத்து காவல், ஊர்க்காவல் படையினருக்கு நன்றி. துப்புரவு பணியாளர்கள், கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட பொதுப்பணி, மின்துறை அலுவலர்கள், சபை காவலர்கள், சட்டசபை செயலக ஊழியர்களுக்கு நன்றி. சிறப்பாக செயல்பட்ட சட்டசபை செயலருக்கு நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வாறு அவர் பேசினர்.

## த.வெ.க. பொதுக்குழு கூட்டம்
# மும்மொழிக் கொள்கை, டாஸ்மாக் ஊழலுக்கு எதிர்ப்பு உள்ளிட்ட 17 தீர்மானங்கள் நிறைவேற்றம்



சென்னை, மார்ச் 28-

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் கட்சி 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிட உள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவது தொடர்பாக கட்சித் தலைவர் விஜய் பல்வேறு வியூகங்களை வகுத்து செயல்பட்டு வருகிறார். கடந்த மாதம் கட்சியின் 2ம் ஆண்டு தொடக்கவிழா பிரமாண்டமாக நடத்தப்பட்டது.

இந்த நிலையில் தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் முதல் பொதுக்குழு கூட்டம் சென்னை திருவான்மியூரில் உள்ள ராமச்சந்திரா கன்வென்ஷன் சென்டர் திருமண மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று அதிகாலை முதலே பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் திருவான் மியூருக்கு வரத் தொடங்கினார்கள். காலை 7 மணிக்கெல்லாம் நிர்வாகிகள் பொதுக்குழு நடைபெறும் மண்டபத்தில் குவிந்னர். அவர்கள் அனைவரும் தோளில் கட்சி நிற துண்டு அணிந்திருந்தனர். காலை 7.30 மணிக்கு நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். நிர்வாகிகள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களை பரிசோதித்து உள்ளே அனுப்புவதற்காக 12 கவுண்டர்கள் அமைக்கப்பட்டு இருந்தன. 10 மாவட்டத்துக்கு ஒரு கவுண்டர் அமைக்கப்பட்டு இருந்தது.

ஒவ்வொரு மாவட்ட நிர்வாகிகளும் எந்த கவுண்டர் வழியாக உள்ளே செல்ல வேண்டும் என்ற அறிவிப்பு பலகை நுழைவு வாயிலிலேயே வைக்கப்பட்டு இருந்தது. நிர்வாகிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கவுண்டர்கள் வழியாக உள்ளே சென்றனர். பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்க வந்த அனைவருக்கும் கியூ.ஆர். கோடுடன் கூடிய டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது. அந்த அடையாள அட்டை வைத்திருந்த நிர்வாகிகள் மட்டுமே பொதுக்குழு நடைபெறும் மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் நீண்ட வரிசையில் நின்று உள்ளே சென்றனர். கூட்டத் தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் என 2,500 பேர் பங்கேற்று உள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு மாவட்ட செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு இணை செயலாளர், 2 துணை செயலாளர்கள், 10 பொதுக்குழு உறுப்பினர்கள், ஒரு பெண் பிரதிநிதி என மொத்தம் 16 பேர் வந்தனர். மாவட்டத்துக்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படாத மாவட்டங்களில் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகள் தங்களின் செல்போன்களை மண்டபத்தின் உள்ளே கொண்டு செல்ல அனுமதி இல்லை. இதையடுத்து செல்போன்களை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கவுண்டர்களில் ஒப்படைத்து விட்டு சென்றனர். பொதுக்குழு கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்குள் ஆண்கள் மற்றும் பெண்கள் அமர தனி வரிசை ஒதுக்கப்பட்டு இருந்தது. மாவட்ட செயலாளர்களுக்கு தனி வரிசையும், மாநில நிர்வாகிகளுக்கு தனி வரிசையும் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக கட்சித் தலைவர் விஜய் பனையூரில் இருந்து புறப்பட்டு காலை 7.30 மணிக்கு பொதுக்குழு நடைபெறும் மண்டபத்துக்கு வந்தார். அவர் பனையூரில் இருந்து திருவான்மியூருக்கு காரில் வந்தபோது வழிநெடுக தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் திரண்டு நின்று சிறப்பான வரவேற்பு அளித்தனர். மேலும் மண்டப நுழைவு வாயிலில் விஜய்க்கு மேளதாளம் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கரகாட்டம், மானாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், பொய்க்கால் குதிரை, செண்டை மேளம், நாதஸ்வரம் உள்ளிட்ட 82 கிராமிய கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேலும் 2 குதிரைகளில் வீரர்கள் போல அமர்ந்திருந்த கட்சி தொண்டர்களும் வரவேற்பு அளித்தனர். மண்டபத்தின் முன்பு நிறுத்தப்பட்டு இருந்த 2 செயற்கை யானைகள் தும்பிக்கையை தூக்கியபடி விஜய்க்கு வரவேற்பு அளித்தது. பொதுக்குழு நடைபெறும் மண்டபத்தின் நுழைவு வாயில் கோட்டை வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. காலை 10 மணிக்கு பொதுக்குழு கூட்டம் கட்சித் தலைவர் விஜய் தலைமையில் தொடங்கியது.

மேடையின் நடுவில் கட்சித்தலைவர் விஜய் அமர்ந்திருந்தார். மேலும் மேடையில் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, பொருளாளர் வெங்கட்ராமன், இணை செயலாளர் தாஹிரா, துணை செயலாளர் சி.டி. நிர்மல் குமார், தலைமை நிலைய செயலாளர் ராஜசேகர், உறுப்பினர் சேர்க்கை பிரிவு செயலாளர் விஜயலட்சுமி ஆகியோர் அமர்ந்திருந்தனர். முதலில் கட்சியின் கொள்கை பாடல் ஒலிக்கப்பட்டது. அதன் பிறகு கட்சியின் கொள்கை தலைவர்கள் பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், அஞ்சலையம்மாள் ஆகியோரின் உருவப்படத்துக்கு விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் மரியாதை செலுத்தினார்கள். அதன் பிறகு உறுதிமொழி ஏற்கப்பட்டது. தென் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் தாமு என்கிற தாமோதரன் வரவேற்றார்.

பின்னர் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் பேசினார்கள். அதன் பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொதுக்குழு கூட்டத்தில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தமிழகத்தில் மும்மொழி கொள்கைக்கு இடமில்லை. இருமொழி கொள்கையே இருக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு வலியுறுத்தப்பட்டது.

தமிழகத்தில் டாஸ்மாக் நிறுவனத்தில் ரூ.1000 கோடி முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை குற்றம் சாட்டியுள்ள நிலையில் இது பற்றி முறையாக விசாரித்து குற்றம் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. எனவே சட்டம்ஒழுங்கில் தனி கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பரந்தூர் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது. எனவே பரந்தூரில் விமான நிலையம் அமைப்பதை கைவிட வேண்டும் என்பது உள்பட 17 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# மியான்மரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: ரிக்டரில் 7.7 ஆக பதிவு





புதுடெல்லி, மார்ச் 28-

மியான்மரில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 7.7 ஆக பதிவாகி உள்ளது. இந்த நிலநடுக்கம் காரணமாக கட்டிடங்கள் குலுங்கின. நிலநடுக்கம் தரையில் இருந்து 10 கிலோமீட்டர்கள் ஆழத்தில் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் அண்டை நாடான தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் உணரப்பட்டது. அங்கு சக்திவாய்ந்த நிலஅதிர்வு ஏற்பட்டது. இதனை அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாக கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் மக்கள் வீடுகளில் இருந்து அலறியடித்தப்படி வெளியே ஓடி வந்தனர். பின்னர் 12 நிமிடம் கழித்து மீண்டும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவானது. இதனால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை. ஆனால் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால் அதிக சேதங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்த நிலநடுக்கம் இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்திலும் உணரப்பட்டது.

# 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சக்கராம்பாளையம் ஸ்ரீ வித்யாபாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்யும் நபரை நம்ப வேண்டாம்

## காரைக்கால் சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் எச்சரிக்கை

**காரைக்கால், மார்ச் 28-**

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்யும் தனி நபரை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம், என காரைக்கால் மாவட்ட சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் பிரவீன் குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



காரைக்கால் மாவட்ட சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் பிரவீன் குமார், இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: சமீப காலமாக பல்வேறு மாவட்டங்களில், வாட்ஸ் அப் பேஸ்புக் உள்ளிட்ட பல்வேறு சமூக வலைதளங்களில், இளைஞர்களை குறி வைத்து வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக விளம்பரங்கள் செய்து பணம் பறிப்பதை சிலர் குறிக்கோளாக கொண்டுள்ளனர். அதேபோல், காரைக்கால் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக சமூக வலைதளங்களில் வரும் வெளிநாட்டு வேலைகள் தொடர்பான விளம்பரங்களை நம்பி, இளைஞர்கள் பலர் விசா பிராசசிங் மற்றும் விமான டிக்கெட் உள்ளிட்ட சித்தரிக்கப்பட்ட புகைப்படங்களை நம்பி, தங்களது பணத்தை இழந்து வருகின்றனர். தங்களிடம் வாட்ஸ்அப், பேஸ்புக் மற்றும் வேறு சில சமூக வலைதளங்களிடமிருந்து வெளிநாடு வேலை வாங்கித் தருவதாக விளம்பரம் செய்யும் கன்சல்டன்சி அல்லது தனி நபரை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம். ஏனெனில் இதைப்போல் வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி அவர்களிடமிருந்து பல்வேறு பிராசசிங் பீஸ் விசா பீஸ் என்று பல்வேறு காரணங்களை கூறி உங்களிடமிருந்து பணத்தை பறித்து விட்டு போலியான விசா, போலியான ஆஃபர் லெட்டர் போன்றவற்றை தங்களுக்கு அனுப்பி மேலும் பணம் பறிக்க நேரிடும். மேலும் வெளிநாட்டில் எந்தவித வேலையும் கிடைக்காது. இதைப்போல கடந்த ஆண்டில் காரைக்கால் சைபர் கிரைம் பிரிவில் மட்டும் வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றப்பட்டு கொடுக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் இழந்த பணமதிப்பு ரூ.8 லட்சத்திற்கும் மேலாகும். மேலும் இதுபோன்ற மோசடியில் சிக்கி யாரும் ஏமாற வேண்டாம் என்று, காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சௌஜன்யா உத்தரவு பேரில் காரைக்கால் சைபர் கிரைம் குற்றப்பிரிவினர் இந்த எச்சரிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒன்றிய அரசை கண்டித்து நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுகவினர் திரளாக பங்கேற்க வேண்டும்

## விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் அறிவிப்பு



**செஞ்சி, மார்ச் 28-**

100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுகவினர் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமென மாவட்டசெயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தெரிவித்துள்ளார்.

100 நாள் வேலை உறுதி திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய ரூபாய் 4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் அனைத்துஒன்றியங்களிலும் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திமுகவினர் பொதுமக்கள் திரளாக பங்கேற்க வேண்டுமென மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வேண்டுகோள் விடுத்துள்ளார்

இதுகுறித்து செஞ்சியில் நடைபெற்ற விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுகஅவசர கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில், கட்சி தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒன்றிய பாஜக அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்குவது குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள்நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூபாய் 4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியை வழங்காமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திமுக சார்பில் நாளை 29. 3 .2025 ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00மணிக்கு அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்படு இடங்களில் 100 நாள்வேலைவாய்ப்பில் பயன் பெறுவோரை திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் .

மாவட்ட கட்சி நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கட்சி முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன் ,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் விஜயகுமார், நெடுஞ்செழியன் ,விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, அண்ணாதுரை,இளம்பழுதி, மணிமாறன் ,ராஜாராமன், பழனி, ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பேரூர் செயலாளர்கள்கார்த்திக், சம்பத்,பொதுக்குழு உறுப்பினர் வீடுர் ரவி மாவட்ட கவுன்சிலர்கள்அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், அன்பு செழியன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## காரைக்கால் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் திருவுருவ சிலையை அமைக்க வேண்டும்

## காரைக்கால் நிரவி, திருபட்டினம் சட்டமன்ற தொகுதி விசிக செயலாளர் கோரிக்கை

**காரைக்கால், மார்ச் 28-**

காரைக்கால் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் சட்ட மாமேதை அம்பேத்கர் திருவுருவ சிலையை அமைக்க வேண்டும், என காரைக்கால் நிரவி, திரு பட்டினம் சட்டமன்ற தொகுதி விசிக செயலாளர் விடுதலைக்கனல் கோரிக்கை விடுத்துள்ளார்.



காரைக்கால் நிரவி, திருபட்டினம் சட்டமன்ற தொகுதி விசிக செயலாளர் விடுதலைக்கனல், இது குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் புதுச்சேரி அரசுக்கு அனுப்பி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது: எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை காரைக்கால் மாவட்ட நீதிமன்ற வாசலில் (வளாகத்தில்) சட்ட மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் திருஉருவ சிலையை நிறுவ வேண்டும் என்று நாங்கள் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம்.

அப்போது பழைய கோர்ட் வளாகத்தில் இட பற்றாக்குறை, இட நெரிசல் இதையெல்லாம் காரணமாக சொல்லி தவிர்த்து வந்த சூழ்நிலையில், தற்போது காரைக்காலில் ஒருங்கிணைந்த கோர்ட் என்பது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை விட பல மடங்கு பெரிதாக, தாராளமாக கட்டி அமைக்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது.

எனவே புதுச்சேரி முதலமைச்சர் மற்றும் காரைக்கால் மாவட்ட கலெக்டர், காரைக்கால் மாவட்ட ஒருங்கிணைந்த கோர்ட் நீதிபதிகள் இதற்கான தீர்வை உடனடியாக காண வேண்டும். நாங்கள் ஒன்றும் சம்பந்தமில்லாத ஒரு இடத்தில், எந்த சம்பந்தமும் இல்லாத ஒரு தலைவர் சிலையை நிறுவுங்கள் என்று கேட்கவில்லை.

சட்டத்தை நமக்கு வகுத்து தந்த புரட்சியாளர் அம்பேத்கர் சிலையை தான் நிறுவ கேட்கிறோம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற தத்துவத்தின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி இந்த நாடு இந்த சட்டத்தினால் தான் நடைபெறுகிறது என்பது உண்மை என்றால், காரைக்கால் மாவட்ட ஒருங்கிணைந்த கோர்ட் வளாகத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலையை நிறுவி புதிய தலைமுறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் காரைக்கால் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு, காரைக்கால் மாவட்ட கோர்ட் வளாகத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலையை நிறுவுவதற்கு உடனடியாக அறிவிப்பு செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் கோர்ட் வளாகத்தில் இருக்கிற ஒவ்வொரு அலுவலகம் மற்றும் கோர்ட்டில் மற்ற தலைவர்களோடு சேர்த்து புரட்சியாளர் அம்பேத்கர் புகைப்படமும் கட்டாயம் வைக்க வேண்டும். இவ்வாறு அந்த கோரிக்கை மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## காரைக்காலில் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்



**காரைக்கால், மார்ச் 28-**

காரைக்காலில் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குனர் மற்றும் திட்ட இயக்குனர் (ஆத்மா) கணேசன் ஆலோசனையின்படி, காரைக்கால் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் இயங்கும் வேளாண் தொழில்நுட்பமேலாண்மை முகமை (ஆத்மா) மற்றும் மாதூர் விதைப் பண்ணையும் இணைந்து, பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி முகாம் நேற்று(27.03.2025) நிரவி, திருநள்ளாறு, சுரக்குடி உள்ளிட்ட 3 இடங்களில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியில், நிரவி வேளாண் அலுவலர் இந்துமதி, திருநள்ளாறு வேளாண் அலுவலர் ராஜலெட்சுமி, மற்றும் சுரக்குடி வேளான் அலுவலர் அமீனா பீபி ஆகியோர் அந்தந்த பயிற்சியில் கலந்துகொண்டு விவசாயிகளை வழி நடத்தினார்.

தொடர்ந்து, பஜன்கோவா அரசு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உழவியல் துறை, பூச்சியியல் துறை மற்றும் நோயியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் மேற்கண்ட 3 இடங்களிலும் கலந்து கொண்டு, பருத்தியில் ஒருங்கிணைந்த உர மேலாண்மை, நீர் மேலாண்மை, களை மேலாண்மை, நுனி கிள்ளுதலின் முக்கியத்துவம், பருத்தியை தாக்கும் பூச்சிகள், முக்கியமான நோய்களை பற்றியும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கமளித்தார்கள்.

பயிற்சி நிறைவாக 120க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, பூச்சிகளை கட்டுப்படுத்தவும், பயிர் நோய்களைக் வளர்ச்சியூக்கியாகவும் பயன்படக்கூடிய பாக்டீரியா ஏதிர் உயிரியான திரவ வடிவிலான பேசிலஸ் சப்டிலிஸ் மற்றும் என்பிகே 19:19:19 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை மாதூர் வேளாண் அறிவியல் நிலைய விதைப் பண்ணை அலுவலர் அலன், நிரவி, திருநள்ளாறு, சுரக்குடி வேளாண் அலுவலர்கள் மற்றும் ஆத்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் மற்றும் வேளாண் விரிவாக்க பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழக தத்துவத் துறை சார்பில் உதகையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பயணம்

**சிதம்பரம், மார்ச் 28-**

அண்ணாமலைப் பல்கலைக்கழக தத்துவத் துறை கல்விச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், பல்கலைக்கழக தத்துவத்துறையுடன் கடலூர் மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியமும், பூம்புகார் பனை அறக்கட்டளையும் இணைந்து சுற்றுச்சூழலுக்கு மிகவும் கேடு விளைவிக்கக் கூடிய பிளாஸ்டிக் பைகளை தவிர்க்கும் பொருட்டு ஊட்டியில், தமிழக அரசின் மீண்டும் மஞ்சள் பை திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் மஞ்சள் பை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் உதகமண்டலத்தின் முன்னாள் கவுன்சிலர் புஷ்பராஜ் கலந்து கொண்டு தத்துவத்துறை தலைவர் முனைவர்.ஜெ. திருமால் அவர்களிடமிருந்து முதல் பையைப் பெற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து பொதுமக்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் என 50க்கும் மேற்பட்டோருக்கு மஞ்சள் பைகள் வழங்கப்பட்டு, அதனை தொடர்ந்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தத்துவத்துறை பேராசிரியர் மற்றும் பூம்புகார் பனை அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் முனைவர்.க.இரவீந்திரன் செய்திருந்தார்.



# கவர்னரை மரியாதை நிமித்தமாக சந்தித்த சபாநாயகர்



2025-26ம் ஆண்டிற்கான சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவடைந்ததை தொடர்ந்து சட்டப்பேரவை தலைவர் செல்வம், கவர்னர் கைலாஷ்நாதனை மரியாதை நிமித்தமாக சந்தித்து நன்றி தெரிவித்தார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

## மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு




**செஞ்சி, மார்ச் 28-**

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் புனித ரமலான் சமூக நல்லிணக்க இஃப்த்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி வட்டார ஜமாத் தலைவர் சையத்அப்துல் மஜித் பாபு, தலைமை தாங்கினார்.சக்தி ரவிச்சந்திரன்,செஞ்சி புனிதமிக்கேல் ஆலயத்தின் பங்கு தந்தைஅந்தோணி ராஜ்,செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் அனைவரையும் வரவேற்றார். விழாவில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புனித ரமலான் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இதில் மதிமுக மாநில துணை பொது செயலாளர் ஏ. கே. மணி,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில துணைச்செயலாளர் ரங்க பூபதி,மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், செஞ்சி வட்டார செயலாளர் ஆல்பர்ட் வேளாங்கண்ணி, ,செஞ்சி நகைக்கடை சங்கத் தலைவர் ஆதில் பாஷா, வர்தகர் சங்கத் தலைவர் செல்வராஜ், வணிகர் சங்க தலைவர்ரப்பானி ஆதம், சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் சங்கர், துணைத் தலைவர் சுரேஷ், முன்னாள் ரோட்டரி கிளப் சங்கத் தலைவர் பாஸ்கர்,நுகர் பொருள் விநியோகஸ்தர்கள் சங்க தலைவர் தேவராஜ் மணிகண்டன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், சேது நாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் டாக்டர் சேகர், ,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள்மரக்காணம் ரவிக்குமார் ,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மணிவண்ணன், கதிரேசன், வீடுர் ரவி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜாராம், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன்,, துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், நாராயண மூர்த்தி, , பேரூர் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், நகர பேரூர் தலைவர்கள், ஒன்றிய துணை பெருந்தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள்,திமுக நிர்வாகிகள்,அனைத்து தோழமைக் கட்சி நிர்வாகிகள்.

கலந்து கொண்டனர். முகமது அஷ்ரப் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.நகர விவசாய அணி அமைப்பாளர் ஜான்பாஷா நன்றி கூறினார்.

# புதுச்சேரி, காரைக்காலில் இன்று 10ம் வகுப்பு பொதுத்தேர்வு துவங்கியது

**புதுச்சேரி, மார்ச் 28-**

புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று துவங்கியது.

இது குறித்து பள்ளிக்கல்வி இணை இயக்குநர் சிவகாமி விடுத்துள்ள செய்தி குறிப்பில், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு, சென்னை தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட அட்டவணைப்படி தேர்வுகள் இன்று துவங்கி, வரும் 15ந் தேதி வரை புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் புதுச்சேரி பள்ளிக் கல்வித்துறையால் நடத்தப்படுகிறது. இதற்காக புதுச்சேரி பகுதியில் 20 இடைநிலைத் தேர்வு மையங்களும், காரைக்கால் பகுதியில் 6 இடைநிலைத் தேர்வு மையங்களும் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மையமுதன்மை கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், பறக்கும் படை அலுவலர்கள், நிலையான படை அலுவலர்கள், வழித்தட அலுவலர்கள், மற்றும் அறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டு இத்துறை மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு புதுச்சேரி பகுதியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை 146 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 7,278 பள்ளிமாணவர்களும், 573 தனித் தேர்வர்களும் தேர்வெழுதுகின்றனர். காரைக்கால் பகுதியில் பத்தாம் வகுப்புபொதுத் தேர்வினை 28 தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 497 பள்ளி மாணவர்களும் 284 தனித் தேர்வர்களும் தேர்வெழுதுகின்றனர்.

தேர்வு நடைபெறும் நாட்களில் மந்தணக் கட்டுகளை தேர்வுமையங்களுக்கு கொண்டு செல்வதற்கு புதுச்சேரி பகுதியில் 6 வழித்தடங்களும் காரைக்கால் பகுதியில் 2 வழித்தடங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வழித்தடங்களுக்கும் 2 வழித்தட அலுவலர்களும் 1 ஆயுதம் ஏந்திய காவலரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் தேர்வின் போது தடையின்றி மின்சார சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வெழுத வருகைதரும் தேர்வர்கள் எவரும் அலைபேசி மற்றும் எந்தவொரு தகவல் தொடர்பு சாதனங்களையும் எடுத்துவர தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே "பொதுதேர்வெழுதும் பள்ளித் தேர்வர்கள் மற்றும் தனித்தேர்வர்கள் எவரும் தேர்வுமையத்திற்கு அலைபேசி மற்றும் எந்தவொரு தகவல் தொடர்பு சாதனங்களையும் எடுத்துவருதல் கூடாது. அதனை மீறி அலைபேசிகள் அல்லது ஏதேனும் பிற தொலை தொடர்பு சாதனங்களையோ எடுத்துவந்துவிட்டு தேர்வுமைய முதன்மைக் கண்காணிப்பாளரையோ அல்லது தேர்வறைக் கண்காணிப் பாளர்களையோ பாதுகாப்பாக பராமரித்து திருப்பியளிக்குமாறு கோருதல் கூடாது".

தேர்வுக்கூட அனுமதி சீட்டு இல்லாத மாணவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு எழுத அனுமதிக்கப் படமாட்டார்கள். தனித்தேர்வர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புகைச் சீட்டு எண் மற்றும் பிறந்ததேதியை வைத்து தனியார் கணிணிமையம் மூலம் தேர்வுக்கூட அனுமதி சீட்டுகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

தேர்வு அறையில் மற்றும் தேர்வுமையத்தில் ஒழுங்கீனசெயலில் ஈடுபடும் தேர்வர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் புரியும் குற்றத்திற்கு ஏற்ப தண்டனைகள் அளிக்கப்படும். எனவே தேர்வர்கள் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடாமல் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு அதில், கூறப்பட்டுள்ளது.

# அண்ணாமலைப் பல்கலைக்கழக வேதிப்பொறியியல் துறையில் உலக மகளிர் தின விழா




**சிதம்பரம், மார்ச் 28-**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைககழகத்தின் வேதிப்பொறியியல் துறையில் உலக மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. துறைத்தலைவர் சரவணன் மகளிரின் பங்கு ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் வீட்டின் வளர்ச்சிக்கும் எவ்வளவு முக்கியம் என்று எடுத்துக் கூறி அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார். புலமுதல்வர் கார்த்திகேயன் தலைமை உரையாற்றினார். அவர் பேசுகையில் பல பெண் தலைவர்களை மேற்கோள்காட்டி அவர்கள் வழியில் அனைவரும் நடந்தால் வாழ்க்கையில் வெற்றிபெறுவது உறுதி என்று தெரிவித்தார். பின்னர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆர்த்தி வெற்றிமாறன் பேசுகையில் பொருளாதார ரீதியாக பெண் சுதந்திரம் குறித்தும் பெண்கள் வேலைக்கு செல்வது இக்காலகட்டத்தில் எவ்வளவு முக்கியத்துவம்வாய்ந்தது என்றும் கூறினார். முனைவர் ஹேமசித்ரா, பிஸியோதெரபிஸ்ட் உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் வலுவாக இருப்பது குறித்தும் பெண்களது சுயமரியாதை குறித்தும் பேசினார். மற்றொரு சிறப்பு விருந்தினரான எஸ்ஆர்எம் பல்கலைக்கழக பேராசிரியர் சுபா அருணாச்சலம் ஒவ்வொருவரும் தனித்தன்மை மற்றும் திறமைகளை எவ்வாறு வெளிக்கொணர்ந்து வாழ்க்கையில் முன்னேறுவது என்பது குறித்து விரிவுரை ஆற்றினார். முன்னதாக துறையில் பணிபுரியும் பெண் ஆசிரியைகள் மற்றும் பெண் ஊழியர்கள் அனைவரும் சிறப்பு பரிசு வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் வேதிப்பொறியியல் துறையின் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. இறுதியாக பேராசிரியர் முல்லை நன்றி தெரிவித்தார் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செயதிருந்தனர்.

# ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுவிழா



**திண்டுக்கல், மார்ச் 28-**

கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒப்புதலின்படி, ஒட்டன்சத்திரம் மத்திய கழகச் செயலாளர் பாலு தலைமையில், ஒட்டன்சத்திரம் மத்திய கழக ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழ்க்கண்ட அத்திகோம்பை ஊராட்சியில் லெக்கையன்கோட்டையில் சாலைப்புதூர் முதல் காளாஞ்சிபட்டி வரை முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2 தார்சாலை 2.28 கிலோ மீட்டர் 80 இலட்ச மதிப்பீட்டில் தார்சாலை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது..

இந்நிகழ்வில் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ், மத்திய ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம் வடகாடு சிவகுமார்,ராமசாமி சிவபாக்கியம், மாவட்ட பிரதிநிதி சண்முகம், ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் தண்டபாணி, முருகேசன் காண்ட்ராக்டர் ஊராட்சி ஒன்றிய உதவி பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விளக்கன், பார்த்திபன், அப்துல்லா , குழந்தைவேல், பொன்முருகன், வாழை தங்கராஜ் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஊத்தங்கரை வித்ய விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பெருவிழா




**கிருஷ்ணகிரி, மார்ச் 28-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வித்ய விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பெருவிழா பள்ளியின் அறக்கட்டளை தலைவர் பழனிவேல் தலைமையில் பள்ளியின் தாளாளர் சக்திவேல் தொடக்க உரை நிகழ்த்தினார். இதில் சிறப்பு விருந்தினராக ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, ஊற்றங்கரை தமிழ் சங்கம் இணை செயலாளர் கவிஞர் சாகுல் அமீத் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியிலே உலகிற்கு வழிகாட்டும் அணையா விளக்கு என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பள்ளியின் இருபால் ஆசிரியர் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரத்தில் போக்குவரத்து காவலர்கள் அதிரடி நடவடிக்கை




**விழுப்புரம், மார்ச் 28-**

விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், துணைக் கண்காணிப்பாளர் வழிகாட்டுதல்படி விழுப்புரம் போக்குவரத்து போலீசார் தொடர்ந்து அதிரடி நடவடிக்கை எடுத்து வருகின்றனர். விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள சாலையில் போக்குவரத்து விதிமுறைகளை மதிக்காமல் முறையற்ற முறையில் இரண்டு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் சாலை ஓரம் நிறுத்துவதை தடுத்து ஒரு சில நாட்களுக்கு முன்பு இரும்பு தடுப்புகள் அமைத்து முறைப்படுத்தினார்கள். இதைத் தொடர்ந்து போக்குவரத்து காவல் ஆய்வாளர் வசந்த், உதவி ஆய்வாளர் குமார ராஜா, விஜயரங்கன், சிறப்பு உதவிகாவல் ஆய்வாளர் ராமச்சந்திரன் தலைமை காவலர்கள் நித்திய குமார் வினோத், அடங்கிய குழுவினர் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள சாலையில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக அதிக சத்தங்களை எழுப்பும் (ஏர் ஹாரன்) அடித்துக் கொண்டு பேருந்துகள் இயக்குவதாக பொதுமக்கள் அளித்த தகவலின் அடிப்படையில் முறையற்ற முறையில் பொதுமக்களுக்கு இடையூறாக அதிக சத்தங்கள் எழுப்பும் (ஏர் ஹாரன்கள்) பொருத்தப்பட்ட 10க்கும் மேற்பட்ட அரசு, தனியார் பேருந்துகளை தடுத்து நிறுத்தி ஏர் ஹாரன்கள் அகற்றி பறிமுதல் செய்து தலா ஒரு பேருந்துக்கு ரூ.10,000/- என அபராதம் விதித்தனர்.

தொடர்ந்து வாகன ஓட்டிகளுக்கு போக்குவரத்து விதிமுறை குறித்த விழிப்புணர்வு எடுத்துரைத்தனர். இந்த அதிரடி நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் என்றும், பொதுமக்கள் போக்குவரத்து விதிமுறைகளை முறையாக மதித்து நடந்திட வேண்டும் என்று போக்குவரத்து காவல் துறை தெரிவித்தனர்.

# திருவெண்ணெய்நல்லூர் அருகே உரக்கம்பெனியை பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டம்



**திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 28-**

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள மாமந்தூர் வேல்முருகன் உரம் யூரியா தயாரிக்கும் கம்பெனியிலிருந்து வெளி வரக்கூடிய நச்சு புகையினால் கேன்சர் நோய் வருவதாகவும் 15க்கும் மேற்பட்டவர்கள் இறந்து விட்டதாகவும் கூறி கம்பெனியை முற்றுகையிட்டு போராட்டம் சாலை மறியல் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் மாமந்தூர் கிராமத்தில் 2000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்தில் சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை ஓரமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு உரம் யூரியா கெமிக்கல் தயாரிக்கும் கம்பெனி தொடங்கப்பட்டது. இந்த உர கம்பெனியில் இருந்து வெளிவரக்கூடிய புகை மற்றும் நச்சு அதிக அளவில் வருவதாலும் காற்றில் பரவி மாமந்தூர், சித்தானங்கூர் அரும்பட்டு உள்ளிட்ட கிராமங்களில் புகை மற்றும் காற்று மாசுபடுவதால் மூச்சுத் திணறல் கேன்சர் அலர்ஜி அரிப்பு உள்ளிட்ட பல நோய்கள் வருவதாலும் இதனால் 15க்கு மேற்பட்டவர்கள் இறந்து விட்டதாகவும் கூறி இன்று இரவு 8 மணி அளவில் உரம் தயாரிக்கும் பெனியை முற்றுகையிட்டு போராட்டம் செய்தனர். இது பற்றி தகவல் அறிந்த திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மைக்கேல்இருதயராஜ் மற்றும் போலீசார் பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது பொதுமக்கள் இந்த உரம் தயாரிக்கும் கம்பெனியிலிருந்து வெளிவரக்கூடிய நச்சு புகையினால் மூச்சு திணறல் அரிப்பு கேன்சர் உள்ளிட்ட நோய்கள் வந்து எங்கள் கிராமத்தைச் சேர்ந்த 15க்கும் மேற்பட்ட வர்கள் இறந்துவிட்டனர். இதனால் கம்பெனியை உடனடியாக மூட வேண்டும் எனக் கூறி போலீசாரிடம் வாக்குவாதம் செய்தனர். இதில் ஆத்திரமடைந்த மாமந்தூர் கிராமத்தைச் சேர்ந்த இளையபெருமாள் மகன் சங்கர் (55) இவருடைய மனைவி கேன்சர் நோயினால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வருவதாக கூறி கேனில் தான் கொண்டு வந்திருந்த மண்ணெண்ணெய்யை தன் மேல் ஊற்றி தீக்குளிக்க முயற்சித்தார். அப்போது அவரை போலீசார் தடுத்து கேனை பிடுங்கிக் கொண்டனர்.

அதன் பிறகு போலீசார் வாகனத்தை முற்றுகையிட்டு போராட்டம் செய்தனர். அதன் பிறகு பொதுமக்கள் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் செய்தனர். போலீசாரின் நீண்ட நேரம் பேச்சுவார்த்தைக்கு பிறகு சமாதானம் ஏற்பட்டது. மேலதிகாரியிடம் பேசி நிரந்தர தீர்வு காணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறியதன் பேரில் பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர் இதனால் இப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தை வேலூர் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, தொரப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# நாகர்கோவில் பாஜக எம்எல்ஏவை வரவேற்ற அமைச்சர்



புதுச்சேரிக்கு வருகை தந்த தமிழ்நாடு நாகர்கோவில் பாஜக சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.காந்திக்கு, பாஜக சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராமலிங்கம் முன்னிலையில், புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பொன்னாடை மற்றும் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

# டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பண்ட், டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பென்ஷன் பண்ட்: 2 புதிய நிதி திட்டங்களை டாடா ஏஐஏ அறிமுகம்

**கோவை, மார்ச் 28-**

இந்தியாவின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையிலும், முதலீட்டாளர்கள் அதிகபட்ச வரி விலக்கு பெறும் வகையிலும் டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பண்ட் மற்றும் டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பென்ஷன் பண்ட் என்னும் 2 புதிய நிதி திட்டங்களை டாடா ஏஐஏ அறிமுகம் செய்துள்ளது. இது குறித்து டாடா ஏஐஏவின் தலைமை முதலீட்டு அதிகாரி ஹர்ஷத் பாட்டீல் கூறுகையில் மத்திய அரசின் சமீபத்திய பட்ஜெட் மாத சம்பளதாரர்களுக்கு அதிகபட்ச வரி சலுகைகளை வழங்கி உள்ளது. இதன் காரணமாக

TATA AIA LIFE INSURANCE

மக்களிடையே வாங்கும் தன்மை அதிகரிக்கும். புதிய வரி திட்டத்தில் நிதி ஆண்டு 2026 முதல் ரூ.12.75 லட்சம் வரை ஆண்டு வருமானம் அல்லது சம்பளம் வாங்கும் தனிநபர்கள் வரி செலுத்த வேண்டியது இல்லை. இதன் காரணமாக இந்திய நுகர்வோரின் வாங்கும் தன்மை அதிகரிப்பதோடு, இது பல்வேறு துறைகளில் தேவையை அதிகரிக்கச் செய்யும். மேலும் இது நமது பொருளாதார வளர்ச்சியோடு, ஒரு தனித்துவமான முதலீட்டு வாய்ப்பையும் ஏற்படுத்தும். இதை கருத்தில் கொண்டு, இந்தியாவின் முன்னணி ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான டாடா ஏஐஏ ஆயுள் காப்பீடு (டாடா ஏஐஏ) வெவ்வேறு நுகர்வோர் பிரிவுகளை இலக்காகக் கொண்டு இரண்டு புதிய முதலீட்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது: டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பண்ட் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நிதி திட்டம், நுகர்வோரின் அதிகரித்து வரும் நுகர்வுப் போக்குகளைப் பயன்படுத்திக் கொள்வது மட்டுமல்லாமல், தங்கள் அன்புக்குரியவர்களுக்கு நிதிப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இது நீண்ட கால வளர்ச்சியை வழங்க வகையில் உருவாக்கப்பட்டுள்ள இது, வரவிருக்கும் ஆண்டுகளுக்கு நிதி ஸ்திரத்தன்மை மற்றும் மன அமைதியை வழங்கக்கூடிய ஒரு வலுவான ஒய்வூதிய நிதியை உருவாக்க உதவுகிறது. இந்த இரண்டு புதிய நிதி திட்டங்களிலும் வரும் 31ந்தேதி வரை முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம். இதன் ஒவ்வொன்றின் விலை ரூ.10 ஆகும். அதிகரித்து வரும் வருமானம், நகரமயமாக்கல் மற்றும் வளர்ந்து வரும் நுகர்வோர் விருப்பத்தேர்வுகள் ஆகியவற்றால் இந்தியாவின் நுகர்வானது வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கிறது. சமீபத்திய வரி சீர்திருத்தங்கள் இந்தப் போக்கை மேலும் துரிதப்படுத்தியுள்ளன, நுகர்வோரின் கைகளில் அதிக பணம் இருப்பது என்பது, நுகர்வோர் பொருட்கள், சில்லறை விற்பனை, மின்னணு வணிகம் மற்றும் ஆட்டோமொபைல் போன்ற துறைகளின் வளர்ச்சியில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் நுகர்வோர் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்கும் இந்த இளம் ஊழியர்களால் இந்தியா சிறந்த பலனை அடைந்து வருகிறது. வருமான வரி விலக்கு காரணமாக அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை பல்வேறு பொருட்களை வாங்க மற்றும் நிதி திட்டங்களில் முதலீடு செய்வது அதிகரிக்கும். மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வரிச் சலுகை, குறிப்பாக நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடையே அதிக வாங்கும் சக்தியை எளிதாக்கும், இது அவர்களின் விருப்பப்படி செலவுகளை அதிகரிக்கச் செய்யும். இன்றைய நுகர்வோர் சேமிப்பு, ஆன்லைன் ஷாப்பிங், டிஜிட்டல் சேவைகள் போன்றவற்றை விட அனுபவங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். இந்த மாற்றம் இந்தியாவில் நுகர்வு முறையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பண்ட் மற்றும் டாடா ஏஐஏ டேக்ஸ் போனான்சா கன்சப்ஷன் பென்ஷன் பண்ட் ஆகியவை இந்தியாவின் வளர்ந்து வரும் நுகர்வு முறைகளிலிருந்து பயனடையத் தயாராக உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்து, முதலீட்டாளர்களுக்கு சிறந்த பலனை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

# ஆட்சியர் தலைமையில் வங்கியாளர்கள் கூட்டம்




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாதாந்திர வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் துரைராஜ், திட்ட இயக்குநர் (த.மா.ஊ.வா.இ) மல்லிகா, நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் சுரேஷ் ராமலிங்கம், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) ஸ்வர்ணலதா உட்பட வங்கியாளர்கள் கலந்து கொண்டனர்.

# இராதாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வை ஆட்சியர் ஆய்வு



திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஸ்ரீநித்தியகல்யாணசுந்தரி வெள்ளையன் செட்டியார் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

# தூத்துக்குடியில் 83வது கடற்கரை மேலாண்மைக் குழுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், சுற்றுச்சுழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் 83வது கடற்கரை மேலாண்மைக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் ரேவதி ரமன், மாவட்ட பொறியாளர் (சுற்றுச் சுழல்) சு.வ.கலைவாணி, உதவி சுற்றுச் சுழல் பொறியாளர் பிரதீப் பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்குவதற்கான இடத்தினை ஆட்சியர் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் மீளவிட்டான் கிராமம் லோக்கியாநகரில் 39 பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்குதல் தொடர்பான இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு உடன்குடி) சிவசுப்பிரமணியன், தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் ம.பிரபு, தூத்துக்குடி வட்டாட்சியர் முரளிதரன் ஆகியோர் உள்ளனர்.

# கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளை ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி காட்பாடி ஊராட்சி ஒன்றியம், புத்தூர் ஊராட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் நரிக்குறவர்களுக்கு கட்டப்பட்டு வரும் 40 குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் சீனிவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நந்தகுமார், கனகராஜ், வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# சட்டம் ஒழுங்கு குறித்து ஆய்வுக்கூட்டம்



மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சாலைப்பாதுகாப்பு, போதைப்பொருள் தடுப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு குறித்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஸ் அசோக், மாநகர துணை காவல் ஆணையர் ராஜராஜன், தீபா சத்தியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ். உதவி ஆணையர் (கலால்) செல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நலஅலுவலர் புஷ்பாதேவி ஆகியோர் உள்ளனர்.

# வேலூரில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற கலைச் சங்கமத்தின் கலை நிகழ்ச்சி



வேலூர் மாவட்டத்தில் கலை பண்பாட்டு துறையின் சார்பில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற கலைச் சங்கமம் கலை நிகழ்ச்சியை மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, நகர அரங்கில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 2 வது மண்டலக்குழுத் தலைவர் ஆர்.நரேந்திரன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற பொதுக்குழு உறுப்பினர் மங்கை அரிராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரியில் நூல் வெளியீட்டு விழா



புதுக்கோட்டை, மார்ச் 28–

புதுக்கோட்டை, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கல்லூரியின் ஆங்கிலத் துறையும் கல்லூரியின் உள்ளீடு தர நிர்ணயக் குழுவும் இணைந்து நடத்திய பன்னாட்டு கருத்தரங்கம் "டிஜிட்டல் பிரிவு" மொழி இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு (DELTA2025) என்ற தலைப்பில் பன்னாட்டு கருத்தரங்கம் ஜனவரி 23 மற்றும் 24 தேதிகளில் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் 125 க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள் பல நாடுகளிலிருந்து பெறப்பட்டது.

இதில் முனைவர் ஜஸ்டின் ஜேம்ஸ், முனைவர் மனோ மங்குட்டு, முனைவர் திலீப் பராடு மற்றும் முனைவர் விஜேந்தர் சிங் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். கல்லூரியின் உள்ளீடு தர நிர்ணய குழுவின் ஒருங்கிணைப்பாளரும் பொருளியல் துறையின் துறை தலைவருமான என் எஸ் சுமதி மற்றும் புதுக்கோட்டை மா மன்னர் கல்லூரியின் ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் எஸ் கணேசன் வாழ்த்துரை வழங்கினர். இக்கருத்தரங்கத்திற்கு 500க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆய்வியல் நிறைஞர்கள் மற்றும் மாணவர்கள் நேரடியாகவும் இணைய வழி மூலமாகவும் பங்கேற்று தங்களது ஆய்வு கட்டுரைகளை விளக்கினார்கள். அதன் தொடர்ச்சியாக நேற்று 27.3.2025 காலை 11:30 மணிக்கு இணைய வழியில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் ஆங்கிலத் துறைத் தலைவர் முனைவர் வெள்ளையம்மாள் வரவேற்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் பொறுப்பு எஸ் ஞான ஜோதி Compendium of Abstract, DELTA 2025 என்ற புத்தகத்தை வெளியிட்டார். டிஜிட்டல் செயற்கை தொழில்நுட்பங்கள் மூலம் மாணவர்களின் திறனை மேம்படுத்துவதாக அமையப் பெற்றது இந்த நூல் 125 ஆய்வு கட்டுரைகளில் 106 கட்டுரைகள் மிகத் துல்லியமாக தேர்வு செய்யப்பட்டு Palimpsests of the Digital Age Reconfiguring Contemporary Humanities என்ற தலைப்பில் புத்தகமாக இணையவழியில் முனைவர் மனு மங்குட்டு அவர்களால் 27.3.2025 வெளியிடப்பட்டு அதன் தேர்வு நுணுக்கங்களை தெளிவாக எடுத்துரைத்தார். இதில் ஆறு ஆய்வு கட்டுரைகள் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இறுதியாக இயற்பியல் துறையின், துறைத் தலைவர் முனைவர் டி வசந்தகுமாரி நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை பன்னாட்டு கருத்தரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பி எஸ் பிரமிளா பிரியதர்ஷினி தொகுத்து வழங்கினார்.

# சிறப்பாக சட்டப்பேரவையை நடத்திய சபாநாயகருக்கு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டு





சிறப்பாக பட்ஜெட் கூட்டத் தொடரை நடத்திய சட்டப்பேரவைத் தலைவர் செல்வத்திற்கு, அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பொன்னாடை போர்த்தி, பூங்கொத்து கொடுத்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# கவர்னருக்கு நன்றி தெரிவித்த காரைக்கால் மீனவர்கள்



புதுச்சேரி, மார்ச் 28–

இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்ட காரைக்கால் மீனவர்கள் கவர்னர் கைலாஷ்நாதனை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

காரைக்கால் மீனவர்கள் உட்பட 13 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் ஒரு மீனவருக்கு காலில் துப்பாக்கி குண்டு பாய்ந்து காயமடைந்தார். அவருக்கு முழு மருத்துவ சிகிச்சை அளிக்கவும், கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், கவர்னரை சந்தித்து கேட்டுக் கொண்டனர்.

அதன் அடிப்படையில் மத்திய அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக மீனவர்கள் விடுவிக்கப்பட்டு, விமானம் மூலமாக சென்னை வந்து, குண்டடிப்பட்ட மீனவர் சிகிச்சைக்காக, சென்னை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மற்றவர்கள் சொந்த ஊர் திரும்பினர். மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்த கவர்னர் கைலாஷ்நாதனை மீனவ பஞ்சாயத்து குழுவினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது எல்லைத்தாண்டி மீன் பிடிப்பதற்கு எழும் சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியுள்ளதாகவும், காரைக்கால் மீனவர்கள் அந்தமான் மற்றும் லட்சத்தீவு பகுதியில் ஆழ்கடல் மீன் பிடிக்க தொலைநோக்கு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு வருவதாகவும் கவர்னர் தெரிவித்தார். மேலும் மீனவர்களின் நீண்ட நாள் கனவு திட்டமான ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன் பிடித்துறைமுகம் அமைக்க, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.130 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டம் காரைக்கால் மீனவ மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் என்றார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் மாரியம்மன் கோயிலில் ஆன்மீக சொற்பொழிவு



ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 28–

ஸ்ரீவில்லிபுத்தூர் மாரியம்மன் கோவில் பூக்குழி திருவிழாவில் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சியை கலசலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கே ஸ்ரீதரன் துவக்கி வைத்து பேசினார். கலசலிங்கம் மருத்துவமனை டாக்டர் எஸ்.சுபா ஆனந்தி சசிஆனந்த் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். தூத்துக்குடி வாசுகி மனோகரன், திருகண்ணப்பர் பற்றி பேசினார். சொற்பொழிவு விழா கமிட்டி தலைவர், உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# 10ம் வகுப்பு தேர்வு மையத்தில் ஆட்சியர் ஆய்வு



பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு இன்று (28.03.2025) தொடங்கியுள்ள நிலையில் சேலம், குகை, மூங்கப்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மு.கபீர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தற்காலிக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மனு



விழுப்புரம், மார்ச் 28–

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் பணிமனையில் 150க்கும் மேற்பட்ட தற்காலிக ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணி செய்து வருகின்றனர், தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் ஆள் சேர்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதனை தொடர்ந்து இதில் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் இரண்டு உரிமம் வைத்துள்ளவர்கள் மட்டுமே பதிவு செய்ய இயலும் என்ற அறிக்கை வெளியிட்டிருந்தது இதனால் எங்களைப் போன்ற ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு பேர் அதிர்ச்சியாகவும் இருக்கின்றது மாவட்ட ஆட்சியர் அவர்கள் எங்கள் மீதும் எங்கள் குடும்பத்தின் மீதும் அக்கறை கொண்டு எங்களுக்கு வாய்ப்பினை பெற்று தர வேண்டும் என்று இம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

# 10ம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் வீரபாண்டியபட்டிணம் புனித தாமஸ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.


# தேசிய காசநோய் ஒழிப்புத் திட்ட வாகனத்தை ஆய்வு செய்த ஆட்சியர்




திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்ட வாகனத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா.சுகுமார் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது: மு.க.ஸ்டாலின்





# தமிழ்நாடு, புதுவையில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கியது

# அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை

# மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் பேசிய ஆசிரியர் பணியிடை நீக்கம்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 28-3-2025 வெள்ளிக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்